**<u>சுருக்கம்</u>**

பேரூராட்சிகள் – பகுதி II திட்டங்கள் 2010–2011 – 22 பேரூராட்சிகளில் உள்ள பேருந்து நிலையங்களின் உட்பகுதியில் சிமெண்ட் தளம் அமைத்தல் – நிர்வாக ஒப்பளிப்பு மற்றும் ரூ.350.00 இலட்சம் விடுவித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.


---

**<u>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ2) துறை</u>**

அரசாணை (2 ப) எண். **33** நாள்: 28. 5. 2010

14, வைகாசி, திருவள்ளுவர் ஆண்டு 2041

படிக்கப்பட்டது:

பேரூராட்சிகளின் இயக்குநரின் கடித எண் 20505/2009/பி1,
நாள் 30.12.2009 மற்றும் 02.4.2010.

*****

**<u>ஆணை:</u>**

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், பேரூராட்சிகளின் இயக்குநர் பெரும்பான்மையான பேரூராட்சிகளில் உள்ள பேருந்து நிலையங்களில் ஓடுதளங்கள் மிகவும் மோசமான நிலையில் உள்ளன எனவும், அவற்றை சரி செய்தால் பேருந்துகள் மிக எளிதாக சென்று வர ஏதுவாகும் என்றும் மேலும் பொது மக்கள் குறிப்பாக மழை காலத்தில் சிரமமின்றி இப்பேருந்து நிலையங்களுக்குள் சென்று வர இயலும் என்பதால் 22 பேரூராட்சிகளில் பேருந்து நிலையங்களின் உட்பகுதியில் சிமெண்ட் தளம் அமைக்க ரூ.350.00 இலட்சம் தேவைப்படுகிறது என தெரிவித்து இவ்வாணையின் இணைப்பில் உள்ளவாறு 22 பேரூராட்சிகளில் இப்பணிகளை மேற்கொள்ள 2010–2011ஆம் ஆண்டிற்கான பகுதி–II திட்டத்தின் கீழ் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளதால் அப்பணிகளை நிறைவேற்றிட நிர்வாக ஒப்பளிப்பு மற்றும் ரூ.350.00 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேலே பத்தி ஒன்றில் குறிப்பிட்டுள்ள பேரூராட்சிகளின் இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமாக ஆய்வு செய்து, 2010–2011ம் ஆண்டிற்கான பகுதி II திட்டத்தின் கீழ் இவ்வாணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள 22 பேரூராட்சிகளில் ரூ.350.00 இலட்சம் (ரூபாய் முன்னூற்று ஐம்பது இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் பேருந்து நிலையங்களின் உட்பகுதியில் சிமெண்ட் தளம் அமைக்க நிர்வாக ஒப்பளிப்பு அளித்தும், அச்செலவினத்தை மேற்கொள்ள ரூ.350.00 இலட்சத்தினை விடுவித்தும் ஆணையிடுகிறது.

3. மேலே பத்தி 2–ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2515.00 other Rural Development Programmes- 800. Other Expenditure, Schemes in the Eleventh Five Year Plan II State Plan - KJ Assistance to Town Panchayat for Infrastructure Development - 09. Grants - in Aid - 02. Grants for capital Expenditure"
(DPC.No. 2515-00-800-KJ-0920).

4. மேலே பத்தி (2)—ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று இணைப்பில் குறிப்பிட்டுள்ள 22 பேரூராட்சிகளுக்கும் விரிவான திட்ட அறிக்கை தயாரித்து பேரூராட்சி மன்றத்தில் ஒப்புதல் பெற்றவுடன் பகிர்ந்தளிக்குமாறு பேரூராட்சிகளின் இயக்குநர் அனுமதிக்கப்படுகிறார்.

5. இவ்வாணை நிதித்துறையின்அ.சா.எண். 26090/MAWS/10, நாள் 14.5.2010—இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நிரஞ்சன்மார்டி
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்:</u>

பேரூராட்சிகளின் இயக்குநர்,
சென்னை—108.(இ).
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு)
சென்னை—1. (இ).
இயக்குநர்,
உள்ளாட்சிகளின் கணக்கு தணிக்கைத்துறை,
சென்னை—108 (இ).
உதவி இயக்குநர், பேரூராட்சிகள் சம்பந்தப்பட்ட மாவட்டங்கள் (இ).
மாநில கணக்குத் துறை தலைவர், சென்னை – 18/35. (இ).
<u>நகல்:</u>
முதன்மைச் செயலரின் தனிச் செயலர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,
சென்னை—9. (இ).
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்
(அந2/வரவு செலவு) துறை, சென்னை—9 (இ).
நிதி (ந.நி(ம)கு.வ / W & M-I) துறை, சென்னை—9. (இ).
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது./

பிரிவு அலுவலர்.

## இணைப்பு

## பகுதி–2 திட்டம்

## 2010–2011 பேருந்து நிலையம் மேம்பாடு

| வ. எண் | மாவட்டம் | பேரூராட்சியின் பெயர் | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) | ஒதுக்கீடு (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | திருவண்ணாமலை | செங்கம் | 15.00 | 15.00 |
| 2 | சேலம் | மேச்சேரி | 20.00 | 15.00 |
| 3 | | சங்ககிரி | 25.00 | 20.00 |
| 4 | | கொளத்தூர் | 20.00 | 15.00 |
| 5 | | இடங்கணாசாலை | 40.00 | 25.00 |
| 6 | நாமக்கல் | மல்லசமுத்திரம் | 16.10 | 15.00 |
| 7 | தர்மபுரி | பொ.மல்லபுரம் | 15.00 | 15.00 |
| 8 | | பெண்ணகரம் | 15.00 | 15.00 |
| 9 | கடலூர் | திட்டக்குடி | 20.00 | 15.00 |
| 10 | | ஸ்ரீமுஷ்ணம் | 37.50 | 25.00 |
| 11 | நீலகிரி | கோத்தகிரி | 25.00 | 20.00 |
| 12 | ஈரோடு | கொடுமுடி | 20.00 | 15.00 |
| 13 | திருப்பூர் | முத்தூர் | 30.00 | 20.00 |
| 14 | திருச்சி | தாத்தையங்கார் பேட்டை | 15.00 | 10.00 |
| 15 | | காட்டுபுத்தூர் | 15.00 | 15.00 |
| 16 | புதுக்கோட்டை | கீரனூர் | 15.00 | 10.00 |
| 17 | மதுரை | தே. கல்லுப்பட்டி | 15.00 | 10.00 |
| 18 | தேனி | உத்தமப்பாளையம் | 15.00 | 10.00 |
| 19 | திண்டுக்கல் | ஒட்டன்சத்திரம் (வெளியூர் பேருந்து நிலையம்) | 30.00 | 20.00 |
| 20 | தூத்துக்குடி | நாசரேத் | 15.00 | 15.00 |
| 21 | | கயத்தாறு | 15.00 | 15.00 |
| 22 | | கழுகுமலை | 15.00 | 15.00 |
| **மொத்தம்** | | | **448.60** | **350.00** |

நிரஞ்சன்மார்டி
அரசு முதன்மைச் செயலாளர்.

**/ உண்மை நகல் /**

பிரிவு அலுவலர்.